**ஜூலை - 31**

**"அவனுடைய வேலைப்பாடு வெளியாகும். நாளானது அதை விளங்கப்பண்ணும்; ஏனெனில், அது அக்கினியினாலே வெளிப்படுத்தப்படும்." - 1கொரி 3 : 12**

இக்காலத்துக்குரிய அக்கினிமயமான சோதனையைக் குறித்தே அப்போஸ்தலன் இங்கே பேசுகிறார். மிகுந்த ஆர்வமுள்ள ஒரு கிறிஸ்தவனின் விசுவாசத்தையும் கிரியைகளையும் பொன், வெள்ளி விலையேறப்பெற்ற கல் இவைகளினால் கட்டப்பட்டிருக்கிற ஒரு வீட்டிற்கு ஒத்திட்டு, இந்த யுகத்தின் முடிவில் ஏற்பட்டிருக்கிற இந்நாளுக்குரிய அக்கினி ஒவ்வொரு மனுஷனுடைய வேலையையும் அது எவ்வகையானது என்று சோதித்து, உண்மையான விசுவாசம், குணம் இவைகளினால் உண்டுபண்ணப்பட்ட அமைப்பைத்தவிர மற்றெல்லாவற்றையும் அழித்துப்போடும் என்கிறார். ஆனால் ஒன்றை நாம் ஞாபகப்படுத்த வேண்டியவர்களாய் இருக்கிறோம். இப்படிப்பட்ட பக்தியுள்ள குணங்கள் ஒரு சில மணிகளிலோ அல்லது நாட்களிலோ காளான் மாதிரி திடீரென்று வளர்வதில்லை. ஆனால் படிப்படியாகத் தோற்றுவிக்கப்படுகின்றன. அவைகள் மேன்மையான தானியமாகவும் ஒலிவமரத்தைப்போல பலமுள்ளதாயும் இருக்கின்றன.

**- Z ’99, 171 (R 2494)**

இந்த வாக்கியம் பிரதிஷ்டை செய்திருக்கிறவர்களை மட்டும் குறிக்கிறது. அதன் "நாள்" பொதுவாக சுவிசேஷயுகத்தைச் சேர்த்துக் கொண்டிருக்கிறது. ஆனால் விசேஷமாக அதன் முடிவை குறிக்கிறதாக இருக்கிறது. இப்பொழுது இங்கே இந்தச் சமயத்தில் தன்னுடைய எல்லா ஜனங்கள் மேலும் அக்கினிமயமான சோதனைகளை கர்த்தர் அனுமதிக்கப் பிரியமுள்ளவராயிருக்கிறார். இவைகளில், நஷ்டங்கள், ஏமாற்றங்கள், தாமதங்கள், தடைகள், தள்ளிப்போகுதல், நம்முடைய குற்றங்களும் மற்றவர்களுடைய குற்றங்களும், சிட்சைகள், வருத்தங்கள், தேவைகள், எதிர்ப்புகள், விபரீதங்கள் (எதிர்பேச்சு) களைப்பு, வியாதி, வருத்தம், துக்கம், உபத்திரவம், தப்பான உபதேசம், சோதனைகள் அடங்கியிருக்கின்றன. ஒருவர் முற்றிலுமாகவோ, பாகமாகவோ, கார்தருடையவராயிருக்கிறாரா அல்லது கர்தருடையவர் அல்லவே அல்ல என்பதையோ இவைகள் தவறாமல் வெளிப்படுத்தும். நமது வேலையாக, சோதனைகளுக்கு அழியாமல் நிற்கிற நமது வேலைப்பாட்டின் தெய்வீக சத்தியத்தின் "பொன்னையும், வெள்ளியையும்" ஒரு கிறிஸ்துவைப்போலொத்த குணத்தின் விலையேறப்பெற்ற கல்லையும் உடையவர்களாக இருப்போமானால் பாக்கியவான்களாயிருப்போம். **- P ’30, 79.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**பிர 12:14; மல் 3:2,3; மத் 7:22-27; 12:36,37; மாற் 4:22; லூக் 2:34; 12:2,3; 1கொரி 3:12,14,15; 4:5; 1பேது 1:7; 4:12,13.**

**கோபுர வாசிப்பு : Z ’16, 195 (R 5916)**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் அடைந்த விசேஷித்த சோதனை எது? அது பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கற்களை அல்லது மரம், வைக்கோல், பதரை வெளிப்படுத்தியதா? அதன் மூலம் நான் எவ்வாறு பயிற்றுவிக்கப்பட்டேன்?**